**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing |
Google Scholar Impact Factor
https://ngmtamil.in/

# சொற்பொருண்மையியல் நோக்கில் அறிவுப் பொருள் தரும் சொற்கள்

**'A semantics approach on the words that convey the meaning wisdom'**

முனைவர் க.சித்ரா, உதவிப்பேராசிரியர்(தமிழ்),
எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம்,
அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்,
இராமாபுரம், சென்னை- kchitraa6@gmail.com.
Dr.CHITRA K., Assistant Professor Tamil, SRM IST, Faculty of Science & Humanities,
Ramapuram, Chennai, kchitraa6@gmail.com. ORCiD: https://orcid.org/0000-0002-1026-4048.

**ஆய்வுச்சுருக்கம்**

**சொற்பொருண்மையியல் ஆய்வு பொருள் உணர்த்துவதில் பன்முகத்தன்மை கொண்ட சொற்களை நுட்பமாக அறிந்துகொள்ள உதவுகின்றது. சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலான தொடர்பினை மையமாகக் கொண்டு சொற்பொருண்மைக் கொள்கைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஒருபொருள் குறித்து வழங்கும் பல பெயர்ச்சொற்கள் தமிழ் மொழியில் வழங்குகின்றன. அச்சொற்கள் ஒருபொருள் குறித்து வழங்கினாலும் அவற்றிடையே நுட்பமான வேறுபாடு காணப்படுவதை அறிமுடிகின்றத. அவ்வகையில் அறிவுப் பொருள் தரும் பல சொற்களை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது. அறிவு எனும் பொருள் தரும் பல்வேறுபட்ட சொற்கள் தமிழ் மொழி இலக்கியங்களிலும் வழக்கிலும் பயன்பட்டு வருகின்றன. குறிப்பாக திருக்குறளில் இப்பொருளுடைய சொற்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் அவற்றிடையேயான நுட்பமான வேறுபாடு என்ன என்பதையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.** திருக்குறளில் மதி ஒட்பம் புலம் அறிவு ஆகிய சொற்கள் அறிவு எனும் பொருள் தருவனவாக பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக அறிவு என்பது நுட்பமாக உண்மையை அறிந்து கொள்ளும் மலர்தலும் கூம்பலும் இல்லாத நிலையான நன்மை பயக்கும் ஆற்றல் என்பது இவ்வரையறைகளின் வழி புலனாகின்றது. திருக்குறளில் ஆளப்பட்டுள்ள புலம் , மதி, ஆகிய சொற்கள் முறையே நூலினால் பெறும் அறிவு, இயற்கையான அறிவு என்ற இரு வேறுபட்ட நிலைகளில் வழங்குவதைக் காணலாம். ஒட்பம் என்பது ஒளிபொருந்திய அறிவு என்ற பொருளில் வழங்குகிறது. அறிவு என்பதற்கு ஒரு படி மேம்பட்ட நிலையாக ஒட்பம் என்பதைக்கொள்ள முடிகிறது. பெறப்பட்ட அறிவைக்கொண்டு செயலாற்றும் திறன் முடிவெடுக்கும்

திறன் உள்ளிட்டவை ஒட்பம் என்ற சொல்லுடன் தொடர்புடையுது. எனவே மதி, ஒட்பம், அறிவு, புலம் ஆகிய சொற்கள் ஒருபொருள் பல சொற்களாக வழங்கப்பட்டாலும் அவை நுண்ணிய பொருள் வேறுபாடு கொண்டுள்ளமை இதன் வழி புலப்படுகிறது.

**ABSTRACT :**

The study of semantics helps to understand the diversity of words in conveying meaning. The principles of semantics have been defined focusing on the relationship between word and meaning. Many nouns that provide information about a single object are provided in the Tamil language. Although these words provide information about a single object, it can be seen that there is a subtle difference between them. In this way, this article aims to examine many words that provide the meaning of knowledge. Various words that provide the meaning of knowledge are used in Tamil language literature and usage. This article aims to examine how words with this meaning are used in Thirukkural in particular and what is the subtle difference between them. In the Thirukkural, the words "madhi otpam pulam arivu" are used to give the meaning of "knowledge". Generally, "knowledge" is a stable beneficial power that is not subject to flowering and cones, which is used to know the truth in a subtle way. The words pulam and "madhi" used in the Thirukkural can be seen to be given in two different levels, namely knowledge obtained through books and natural knowledge, respectively. "Otpam" provides the meaning of knowledge that is illuminated. "Otpam" can be taken as a step further level of "knowledge". The ability to act on the knowledge obtained, including the ability to make decisions, is related to the word "Otpam". Therefore, although the words "madhi", "otpam", "avivu", "pulam" are given as several words with the same meaning, they have subtle differences in meaning.

முன்னுரை

**தமிழ்மொழி சொல்வளம் மிக்க மொழி. காலம்காலமாக வழங்கப்படும் ஒரு பழைமையான மொழி ஆகையால் சொற்பொருள்தொடர்பில் பல மாற்றங்கள் நிகழ்வது இயல்பானது. மேலும் ஒருபொருள் பல சொல் பலபொருள் ஒருசொல் என்ற பன்முகத்தன்மை தமிழ்மொழியில் காணப்படுகிறது. ஒருபொருள் பலசொற்கள் மொழியின் சொல் உயர்மட்ட வளர்ச்சி நிலையைக் காட்டுவனவாகவும் பலபொருள் ஒருசொல் மொழியின் கிடைமட்ட தரநிலையைக் காட்டுவனவாகவும் அமைகின்றன. இந்நிலையில் சொற்பொருண்மையியல் ஆய்வு இத்தகைய பன்முகத்தன்மை கொண்ட சொற்களை நுட்பமாக அறிந்துகொள்ள உதவுகின்றது. அவ்வகையில் அறிவுப் பொருள் தரும் பல சொற்களை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது. அறிவு எனும் பொருள் தரும் பல்வேறுபட்ட சொற்கள் தமிழ் மொழி இலக்கியங்களிலும் வழக்கிலும் பயன்பட்டு வருகின்றன. குறிப்பாக திருக்குறளில் இப்பொருளுடைய சொற்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்**

**அவற்றிடையேயான நுட்பமான வேறுபாடு என்ன என்பதையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.**

**சொற்பொருண்மை ஆய்வு**:

இலக்கணநூலார், மொழியியலார், அகராதியியலார் சொற் பொருள் உறவு அடிப்படையிலான சொல்பாகுபாடுகளை முறையாக வரையறை செய்துள்ளனர். சொல்பொருளின் வளர்ச்சி, வகைப்பாடு, மாற்றம், மாற்றம் ஏற்படுவதற்கான காரணம் இவற்றைக் குறித்த ஆய்வை சொற்பொருண்மை ஆய்வு என்பர். 'பொருண்மையியல்' ('Semantics') சொற்பொருண்மை குறித்த கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்குகின்றது. சொற்பொருண்மைக் கொள்கைகளுள் தொடர்புக்கொள்கை (Relational theory) மூலம் சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலான தொடர்பை அகராதியியலார் விளக்குகின்றனர். "எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே" என்பார் தொல்காப்பியர் (தொல்.சொல்.பெ.நூ.1) மொழியின் அனைத்துச் சொற்களும் இலக்கணப்பொருள் சொற்பொருள் என்ற இரு பொருள்நிலைகளைக் கொண்டுள்ளன. இவற்றுள் சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டு சொற்பொருண்மை ஆய்வு அமைகின்றது. சொற்பொருள் என்பது இடம், காலம், சூழல் உள்ளிட்ட பலகாரணங்களால் மாற்றம் பெறும் தன்மை கொண்டது.

**சொல் பொருள் தொடர்பு:**

சொல்லுக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் இடையேயான தொடர்பு பொதுமையானது எனினும் பயன்படுத்தப்படும் சூழலுக்கு ஏற்ப சொற்பொருள் மாறும் தன்மை கொண்டதாக உள்ளது. உதாரணமாக. நல்ல என்ற பெயரடைச்சொல் பயன்படுத்தப்படும் சூழலுக்கு ஏற்ப பல பொருள்களைப் பெறுகின்றது.

நல்ல விளைச்சல் - மிகுதியான விளைச்சல்
நல்ல வெயில் - அதிகமான வெயில்
நல்ல கூட்டம் - பெரும் கூட்டம்
நல்ல தலைவலி - கடுமையான தலைவலி

இச்சான்றுகள் 'நல்ல' என்ற சொல்லின் பொருள்நெகிழ்வினைக் காட்டுவனவாக உள்ளன. சொற்களின் இத்தன்மையினால் சொல்லுக்கும் பொருளுக்கும் இடையே இருவகையான தொடர்புகள் ஏற்படுகின்றன. அவை;

ஒரு சொல் வடிவம் பல பொருள்களைக் கொண்டிருத்தல், (synonyms)

பல வேறுபட்ட வடிவுடைய சொற்கள் ஒருபொருளைக் கொண்டிருத்தல். (Mononyms)

இவற்றுள், ஒருசொல் பல பொருள்களை ஏற்று வழங்குவதற்கு அகராதியியலார் பல காரணங்களை ஆராய்ந்துள்ளனர். "மொழிச்சூழல், சூழல்மாற்றம், சூழல் சிறப்பாக்கம், அணிநயப்பயன்பாடு, பிறமொழித்தாக்கம் போன்ற பல காரணங்களால் ஒருசொல் பல பொருள்களைப்பெறுகின்றது." (எச்.சித்திரபுத்திரன் - சொல்லும் பொருளும் -ப.18 ) என்பது

அகராதியியலார் கருத்தாகும். அவ்வகையில் பல வேறுபட்ட வடிவுடைய சொற்கள் ஒரே பொருளைப்பெறுவதற்கும் பல காரணங்கள் உள்ளன. அக்காரணங்களையும் அச்சொற்களின் பண்புகளையும் ஆராய்வது அவசியமாகின்றது.

**ஒருபொருள் பல சொல்**

ஒரு மொழியின் சொல் வளர்ச்சியைக் காட்டுவனவாக ஒருபொருளைக்குறிக்க பல சொற்கள் பெருகுகின்றன. சான்றாக மேகம் என்ற ஒருபொருளைக் குறிக்க மஞ்சு, கார், முகில் போன்ற பல சொற்கள் இலக்கியங்களில் வழங்குவதைக் குறிப்பிடலாம். இச்சொற்கள் ஒரே பொருளைக் குறித்து வந்தாலும் அவற்றினிடையே சில நுணுக்கமான பொருள் வேறுபாடுகள் உள்ளன. சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலான உறவு அடிப்படையில் சொற்களை அகராதியியலார் மேலும் நான்காக வகைப்படுத்துகின்றனர்.

அவை:

- ஒருபொருள் பலசொல்
- பல பொருள் ஒருசொல்
- எதிர்ச்சொல்
- மீச்சொல்-கீழ்ச்சொல்

அகராதியியல் மற்றும் இலக்கணநூலார் வரையறைகளின் அடிப்படையில் ஒரு பொருள் பலசொல் என்பது ஒரு பொருளைச்சுட்டுவதாக அமைந்தாலும் இலக்கியங்களில் அவை பயன்படுத்தப்படும் தன்மைகளை ஆராயும் போது அவற்றிடையே நுட்பமான பயன்பாட்டு எல்லை உள்ளமை புலனாகிறது. அவ்வகையில் திருக்குறளில் ஆளப்பட்டுள்ள அறிவுப்பொருள் தரும் பலசொற்கள் பொதுநிலையில் ஒருபொருள் பலசொற்களாக அமைந்தாலும் அவை நுட்பமான பொருள் வேறுபாட்டையும் மற்றும் பயன்பாட்டு எல்லையையும் கொண்டுள்ளன.

**மொழியியல் நோக்கில் ஒருபொருள் பலசொற்கள்**

சொல் உணர்த்தும் பொருளை இலக்கணநூலார் வெளிப்படுபொருள், குறிப்புப்பொருள் என இரண்டாக வகைப்படுத்துவர். ஆனால் மேலைநாட்டினர்
சொல் உணர்த்தும் பொருளை பலவகையாக வகைப்படுத்துகின்றனர்.

- கருத்தாக்கப்பொருள் (Conceptual Meaning)
- உணர்த்தல் பொருள் (Connotative Meaning)
- சமூகப்பொருள் (Social Meaning)
- வெளிப்படுத்துப்பெருள் (Affective Meaning)
- பிரதிபலிப்புப் பொருள் (Reflective Meaning)
- இணைப்புப்பொருள் (Collocative Meaning)
- கருத்துப்பொருள் (Thematic Meaning)

ஒருசொல் பொருள் உணர்த்துவதில் எத்தகைய பன்முகத்தன்மை கொண்டுள்ளது என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. சான்றாக “கடலை போடுதல்“ என்ற தொடரில் கடலை என்பது நிலக்கடலையைக் குறிக்கும் கருத்தாக்கப்பொருள் . இச்சொல் மற்றொரு சூழலில் முற்றிலும் மாறுபட்ட சமூகப்பொருளை உணர்த்தவல்லது. பெண்களிடம் வீணாக அரட்டை அடித்துக்கொண்டிருப்பதை “கடலை போடுகிறான்“ என்ற தொடரால் குறிப்பிடுவர். இவ்வாறு பொருள் உணர்த்துவதில் சொற்கள் பன்முகத்தன்மை கொண்டதாக அமைகின்றது.

அறிவைச் சுட்டும் பெயர்கள்

அறிவு என்பது பல நிலைகளில் பெறப்படும் ஆற்றல். நூல்களைக் கற்றல், உலக நிகழ்வுகளை அறிந்து கொண்டு அதன் வழி தெளிவு பெறல், நேரடி அனுபவங்கள் மூலம் பெறல், கேள்வி அறிவால் பெறல் உள்ளிட்ட பலநிலைகளில் ஒரு விஷயம் சார்ந்த அறிவைப் பெறுகின்றோம். அறிவைப்பெறுகின்ற அல்லது வளர்த்துக்கொள்கின்ற திறனில் ஒவ்வொருவரும் வேறுபடுகின்றனர்.

கல்வியினால் பெறும் அறிவை வளர்த்துக்கொள்வதில் 3 நிலைகள் உள்ளமையை நன்னூலார் குறிப்பிடுகின்றார். தலை மாணாக்கர் , இடை மாணாக்கர் , கடை மாணாக்கர். அது போல அறிவு நிலையும் பல படிநிலைகளைக் கொண்டதாக உள்ளது. **ஞானம், புத்தி, மெய்யறிவு, நுண்ணறிவு, பேரறிவு, சிற்றறிவு, பட்டறிவு என அறிவுநிலைகள் பல படிநிலைகளைக் கொண்டுள்ளன. ஞானம் என்பது உணர்தலைக் குறிக்கின்றது. புத்தி சுய புத்தி, சொல் புத்தி என்ற இருநிலைகளில் வழங்குகின்றது. நுண்ணறிவு என்பது நுட்பமான தெளிந்த அறிவுத்திறனைக் குறிக்கின்றது. பேரறிவு என்பது அனைத்தையும் அறிகின்ற ஆற்றலைக் குறிக்கின்றது. சிற்றறிவு என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட அறிவுத்திறனைக் குறிக்கின்றது. எதனையும் செயல்பாட்டில் தெரிந்து கொள்ளும் அறிவைப் பட்டறிவு (பட்டுத் தெரிந்துகொள்வது) என்பர். இத்தகைய** அறிவைச் சுட்டும் பல பெயர்கள் இலக்கியங்களில் வழங்குகின்றன. அச்சொற்களுக்கிடையேயான நுட்பமான வேறுபாடுகளையும் பொருண்மைகளையும் திருக்குறள் பதிவுகளின் வழி காணலாம்.

**திருக்குறளில் அறிவைச் சுட்டும் பெயர்கள்**

திருக்குறளில் மதி (கு.915) ஒட்பம் (404) புலம் (கு.407) அறிவு (கு.396, 404, 915, 919) ஆகிய சொற்கள் அறிவு என்ற பொருளைத் தருவனவாக உள்ளன. திருக்குறளில் ஆளப்பட்டுள்ள அறிவுப்பொருள் தரும் பலசொற்கள் பொதுநிலையில் ஒருபொருள் பலசொற்களாக அமைந்தாலும் அவை பயன்பாட்டு எல்லை மற்றும் நுட்பமான பொருள் வேறுபாடு கொண்டுள்ளமையை அறியமுடிகிறது.

**<u>அறிவு</u> -** அறிவு என்பதற்கு வள்ளுவர் தரும் வரையறைகள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு (கு.423)

செம்பொருள் காண்பது அறிவு (கு.358)

நுண்பொருள் காண்பது அறிவு (424)

நன்றின்பால் உய்ப்பது அறிவு (கு.422)

மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு (கு.425)

அறிவு அற்றம் காக்கும் கருவி (கு.421)

அறிவு என்ற சொல்லை 39 இடங்களில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். பொதுவாக அறிவு என்பது நுட்பமாக உண்மையை அறிந்து கொள்ளும் மலர்தலும் கூம்பலும் இல்லாத நிலையான நன்மை பயக்கும் ஆற்றல் என்பது இவ்வரையறைகளின் வழி புலனாகின்றது. புலம் என்றும் மதி என்றும் ஒட்பம் என்றும் பல்வேறு சொற்களால் இதே அறிவுத்திறனை வள்ளுவர் சுட்டுகின்றாரா அல்லது பல்வேறுபட்ட அறிவு நிலைகளில் இச்சொற்கள் நுட்பமான பொருள் வேறுபாடு கொண்டுள்ளனவா என்பது ஆராயத்தக்கது.

புலம் - புலம் என்ற சொல்லானது 'நுண்மாண்நுழைபுலம் இல்லான் எழில்நலம்' என்ற தொடரில் கல்லாமை அதிகாரத்தில் இடம்பெறுகின்றது. இச்சொல் "பலநூல்களினும் சென்ற அறிவு" (திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் இரண்டாம் பகுதி – பொருட்பால் ப.86) மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை 1976 )என்று நூலறிவைச் சுட்டுகின்றது.

**ஒட்பம்** - 'ஒட்பம் என்ற சொல்லானது ”கல்லாதார் ஒட்பம் கழிய நன்றாயினும்”(கு.404) என்ற தொடரில் ஒண்மை என்ற சொல்லின் திரிபாக ஆளப்பட்டுள்ளது. இச்சொல் ‘அறிவுடைமை’ எனும் பொருள்படுகிறது. ”ஒட்பம் என்பதற்குப் பரிமேலழகர் அறிவுடைமை என்று பொருள் குறிப்பிடுகின்றார். (திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் இரண்டாம் பகுதி – பொருட்பால் ப.84 மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை 1976 ) அறிவு என்ற பொருண்மையிலிருந்து இச்சொல் சற்று வேறுபட்டு அறிவுடைமை என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. அறிவுடைமையும் ஒட்பமும் ஒருபொருட்பன்மொழி எனப்படும். அதாவது கல்வி அறிவு இல்லாதவன் அறிவுடைமை கொண்டிருந்தாலும் அது பிற அறிவார்ந்த பெருமக்களால் ஏற்றுக்கொள்ளப்படாது என்ற கருத்தை வள்ளுவர் இக்குறளின் வாயிலாகக் குறிப்பிடுகின்றார். மேலும் இச்சொல் மற்றொரு குறளில் இதே பொருளில் ஆளப்பட்டுள்ளது.

“உலகந் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு“ (கு.425)

”உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம் ” அந்நட்பின்கண் முன் மலர்தலும் பின் கூம்புதலும் இன்றி ஒருநிலையானதாவது அறிவாம்” –என்று பரிமேலழகர் இக்குறளுக்கு விளக்கம் தந்துள்ளார். (பரிமேலழகர் -திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் இரண்டாம் பகுதி – பொருட்பால் - ப.483) ஒருவனுக்கு உலகத்தை நட்பாக்கிக்கொள்ள உதவுவது அறிவுடைமை., அறிவுடைமை அறிவின்

காரணமாகத் தோன்றுவது என்பதை இக்குறள் தெளிவுபடுத்துகின்றது. மேலும் ஒட்பம் என்ற சொல்லுக்கான சில பொருள் வரையறைகள் கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

" ஒண்மை – நல்லறிவு" (திருக்குறள் சொல்லடைவு – ப.77- தமிழ் இணையக் கல்விக்கழகம்)

ஒட்பம் – ஒளிபொருந்திய அறிவு – wisdom

நல்லறிவு, ஒளிபொருந்திய அறிவு என்பன பிற்காலத்துப் பொருண்மைகளாக அமைகின்றன.

**<u>மதி</u>** - 'மதி' என்ற சொல்லானது இயற்கையாக அமைந்த அறிவு எனும் பொருள்படுகின்றது. அதாவது முற்பிறப்புக்களிலே செய்த நல்வினைகளால் மனம் தெளிவுடையதாகி மேலும் கல்வியின் வழி அறிவு மேலோங்குதல் என்று பொருள் விளக்கம் செய்யப்படுகிறது. இத்தகைய அறிவினை உடையோரின் பண்பை,

"பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவினவர். (கு. 915)

என்ற குறளால் வள்ளுவர் சிறப்பிக்கின்றார். இக்குறளுக்கு "இயற்கையாகிய மதி நன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கை அறிவினையுடையார் பொருள் கொடுப்போர்க்கெல்லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார்" என்று பரிமேலழகர் விளக்கம் தருகின்றார். இதன் வழி 'மதி' என்ற சொல்லின் பொருட்சிறப்பை அறிய முடிகின்றது.

திருக்குறளில் ஆளப்பட்டுள்ள புலம் , மதி, ஆகிய சொற்கள் முறையே நூலினால் பெறும் அறிவு, இயற்கையான அறிவு என்ற இரு வேறுபட்ட நிலைகளில் வழங்குவதைக் காணலாம். ஒட்பம் அறிவு இரண்டும் ஒருபொருட்பன்மொழிகளாக வழங்கப்பட்டாலும் ஒட்பம் என்ற சொல் அறிவு என்ற சொல்லிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை மேலும் சில சான்றுகளின் வழி காணலாம்.

அறிவு என்பது “knowledge“ என்றும் ஒட்பம் என்பது “wisdom“ என்றும் வழங்கப்படுகிறது. ஒட்பம் என்பது ஒளிபொருந்திய அறிவு என்ற பொருளில் வழங்குகிறது. அறிவு என்பதற்கு ஒரு படி மேம்பட்ட நிலையாக ஒட்பம் என்பதைக்கொள்ள முடிகிறது. பெறப்பட்ட அறிவைக்கொண்டு செயலாற்றும் திறன் முடிவெடுக்கும் திறன் உள்ளிட்டவை ஒட்பம் என்ற சொல்லுடன் தொடர்புடையுது. திருக்குறளில் கல்லாதான் ஒட்பம் என்ற தொடரை வள்ளுவர் கையாண்டுள்ளார் கல்வி அறிவு நூலறிவு இல்லாதார் கூட சிலநேரங்களில் புத்திகூர்மையுடன் செயலாற்றுவதைக் காணலாம். படிக்காத மேதை என்ற வழக்கு தமிழில் உண்டு. அறிவு என்பது நூல் அறிவினால் மட்டுமல்லாது உலக அறிவினால் அனுபவத்தால் சில நேரங்களில் சிலருக்கு வாய்ப்பதுண்டு. அத்தகைய அனுபவம் மற்றும் உலகத்தை உற்று நோக்குவதால் பெறப்படும் அறிவை ஒட்பம் என்பதற்குச் சரியான பொருளாகக் கொள்ளலாம்.

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்றா" (தொல்.சொல்.உரி.நூ.9) என்ற நூற்பாவின் அடிப்படையில் முடிந்த முடிபாக இக்காரணத்தை கொள்ள இயலாவிட்டாலும் இச்சொற்களை சரியான பொருண்மையில் புரிந்துகொள்ள இப்பொருண்மை ஆய்வு துணைசெய்கின்றது. எனவே மதி, ஒட்பம், அறிவு, புலம் ஆகிய சொற்கள் ஒருபொருள் பல சொற்களாக வழங்கப்பட்டாலும் அவை நுண்ணிய பொருள் வேறுபாடு கொண்டுள்ளமை இதன் வழி புலப்படுகிறது.

தொகுப்புரை

**ஒருபொருள் பல சொல் பலபொருள் ஒருசொல் என்ற பன்முகத்தன்மை தமிழ்மொழியில் காணப்படுகிறது. ஒருபொருள் பலசொற்கள் மொழியின் சொல் உயர்மட்ட வளர்ச்சி நிலையைக் காட்டுவனவாகவும் பலபொருள் ஒருசொல் மொழியின் கிடைமட்ட தரநிலையைக் காட்டுவனவாகவும் அமைகின்றன.** சொல்பொருளின் வளர்ச்சி, வகைப்பாடு, மாற்றம், மாற்றம் ஏற்படுவதற்கான காரணம் இவற்றைக் குறித்த ஆய்வை சொற்பொருண்மை ஆய்வு என்பர். 'பொருண்மையியல்' ('Semantics') சொற்பொருண்மை குறித்த கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்குகின்றது. சொற்பொருள் என்பது இடம், காலம், சூழல் உள்ளிட்ட பலகாரணங்களால் மாற்றம் பெறும் தன்மை கொண்டது. ஒருசொல் பல பொருள்களை ஏற்று வழங்குவதற்கு அகராதியியலார் பல காரணங்களை ஆராய்ந்துள்ளனர். அகராதியியல் மற்றும் இலக்கணநூலார் வரையறைகளின் அடிப்படையில் ஒரு பொருள் பலசொல் என்பது ஒரு பொருளைச்சுட்டுவதாக அமைந்தாலும் இலக்கியங்களில் அவை பயன்படுத்தப்படும் தன்மைகளை ஆராயும் போது அவற்றிடையே நுட்பமான பயன்பாட்டு எல்லை உள்ளமை புலனாகிறது. திருக்குறளில் ஆளப்பட்டுள்ள அறிவுப்பொருள் தரும் பலசொற்கள் பொதுநிலையில் ஒருபொருள் பலசொற்களாக அமைந்தாலும் அவை நுட்பமான பொருள் வேறுபாட்டையும் மற்றும் பயன்பாட்டு எல்லையையும் கொண்டுள்ளன.

திருக்குறளில் மதி (கு.915) ஒட்பம் (404) புலம் (கு.407) அறிவு (கு.396, 404, 915, 919) ஆகிய சொற்கள் அறிவு என்ற பொருளைத் தருவனவாக உள்ளன. அறிவு என்ற சொல்லை 39 இடங்களில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். பொதுவாக அறிவு என்பது நுட்பமாக உண்மையை அறிந்து கொள்ளும் மலர்தலும் கூம்பலும் இல்லாத நிலையான நன்மை பயக்கும் ஆற்றல் என்பது திருக்குறள் வரையறைகளின் வழி புலனாகின்றது. திருக்குறளில் ஆளப்பட்டுள்ள புலம் , மதி, ஆகிய சொற்கள் முறையே நூலினால் பெறும் அறிவு, இயற்கையான அறிவு என்ற இரு வேறுபட்ட நிலைகளில் வழங்குவதைக் காணலாம். ஒட்பம், அறிவு இரண்டும் ஒருபொருட்பன்மொழிகளாக வழங்கப்பட்டாலும் ஒட்பம் என்ற சொல் அறிவு என்ற சொல்லிலிருந்து வேறுபட்டு அனுபவம் மற்றும் உலகத்தை உற்று நோக்குவதால் பெறப்படும் அறிவை ஒட்பம் என்ற சொல் சுட்டுகின்றது.

**பார்வை நூல்கள்**

1. இளஞ்செழியன் – சொற்பொருண்மை பொருட்புல ஆய்வு –இமேஜ் இம்ப்ரஸன் பதிப்பகம், சென்னை,2008.
2. சித்திரபுத்திரன்., சொல்லும் பொருளும்., தஞ்சைத்தமிழ்ப்பல்கலைக்கழகம் ., தஞ்சை 2004
3. **திருக்குறள் கழகவெளியீடு., சென்னை., 1936**
4. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் இரண்டாம் பகுதி – பொருட்பால் - மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை 1976.
5. **தொல்காப்பியம்., உரியியல் உரைவளம்.,**
6. திருக்குறள் சொல்லடைவு , தமிழ் இணையக் கல்விக்கழகம்

# தொகைச்சொற்கள்

முனைவர் அ.ஆத்தீஸ்வரி, இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை., மதுரைக் கல்லூரி, (தன்னாட்சி),மதுரை

Dr.A.Atheeswari Associate Professor, The Madura College( Autonomous), Madurai -1

sumasumathi930@gmail.com htthttps://orcid.org/0009-0007-6523

தொக்கி வரும் சொற்கள் (மறைந்து வரும் சொற்கள்) தொகைச் சொற்கள் எனப்படுகின்றன. அதாவது வேற்றுமையுருபுகள், உவம உருபுகள், உம் எனும் சொல், வினை, பண்புச் சொற்களின் ஈறு இவை மறைந்து வருவது தொகைச்சொல் எனப்படுகிறது. வேற்றுமை முதலான பொருள்களின் மீது ஒன்றும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாமல் ஒற்றுபோல் பொருந்தி நிற்பது தொகைச் சொற்கள் எனச் சுட்டப்படுகின்றன.

References

**குறிப்புகள்**

1. தொல்காப்பியம், சொல்: 413
2. தொல்காப்பியம், சொல்: 415
3. தொல்காப்பியம், சொல்: 416
4. தொல்காப்பியம், சொல்: 417
5. தொல்காப்பியம், சொல்: 418
6. தொல்காப்பியம், சொல்: 419

Keywords

Grammer,Tholkappiyam

தொக்கி வரும் சொற்கள் (மறைந்து வரும் சொற்கள்) தொகைச் சொற்கள் எனப்படுகின்றன. அதாவது வேற்றுமையுருபுகள், உவம உருபுகள், உம் எனும் சொல், வினை, பண்புச் சொற்களின் ஈறு இவை மறைந்து வருவது தொகைச்சொல் எனப்படுகிறது. வேற்றுமை முதலான பொருள்களின் மீது ஒன்றும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாமல் ஒற்றுபோல் பொருந்தி நிற்பது தொகைச் சொற்கள் எனச் சுட்டப்படுகின்றன.

அவ்வகையில் முதலாவது வேற்றுமைத் தொகை குறிப்பிடப்படுகிறது. தொகை மொழிகளுள் முதலில் நிற்பது வேற்றுமைத் தொகையாகும்.

**"வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல" 1**

என வேற்றுமைத் தொகைக்கு இலக்கணம் கூறப்படுகிறது. வேற்றுமைத் தொகை என்பது வேற்றுமைப் பொருண்மை உடைய தொகை என்றும் விரிந்து நிற்கிறது. அதாவது வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்கும் வேற்றுமைத் தொடரினைப் போலவே பொருளுணர்த்துவது. இரண்டாம் வேற்றுமைத் தொகை முதலாக வேற்றுமைத் தொகை ஆறுவகைப்படுத்தப்படுகிறது.

**வேற்றுமைத் தொகை உருபு தொடர்ப்பொருளை விளக்குதல்**

- நிலங்கடந்தான் ↓ நிலத்தைக் கடந்தான் (2) ↓
- தாய்மூவர் தாயோடு மூவர் (3)
- கரும்பு வேலி கரும்பிற்கு வேலி (4)
- வரை பாய்தல் வரையினின்றும் பாய்தல் (5)
- சாத்தன் புத்தகம் சாத்தனது புத்தகம் (6)
- மன்றப்பெண்ணை மன்றத்தின்கண் பெண்ணை (7)

உவம உருபுத் தொடர் போல பொருளினை உணர்த்தும் தன்மையில் அமைந்து அப்பொருளினை விளக்கும் ஆற்றல் இல்லாத வகையில் அமைவன உவமத்தொகை எனப்படுகிறது.

**உவமத்தொகை உவம உருபு விரிப்பொருள் விளக்குதல்**

↓ ↓

- புலிப்பாய்த்து (பாய்ச்சல்) புலிப்பாய்த்துளன்
- மழைவண்கை மழையன்ன வண்கை
- துடிநடுவு துடியன்ன நடுவு
- பொன்மேனி பொன்னன்ன மேனி

வினையினை மட்டும் உணர்த்தி நிற்பன வினைச்சொற்களாகும். வினைப் பகுதியாய் நின்று பெயர்த்தன்மை பெற்று வரும் பெயர்கள் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறுவகைப் பெயரோடு இயைந்து வருவது வினைத்தொகை எனப்படுகிறது. அவ்வகையில்,

**"வினையின் தொகுதி காலத்து இயலும்" 2**

எனத் தொல்காப்பியம் காலத்தைக் காட்டும் உறுப்புகள் மறைந்து முக்காலத்திற்கும் பொதுவாய் நிற்பதை வினைத்தொகையாகக் குறிப்பிடுகிறது.

- ஆடரங்கு

ஆடிய அரங்கு - இறப்பு
ஆடுகின்ற அரங்கு - நிகழ்வு
ஆடும் அரங்கு - எதிர்வு

முக்கலாம் காட்டும் உறுப்புகள் மறைந்து நின்றன

இவ்வாறு வினை பிரிந்து நின்ற போது தோன் [illegible] ன் தொகையாற்றலால் காலம் தோன்றும் என்பது இதனால் அறியப்படுகிறது. எனவே இது வினையைக் குறிக்கும் தொகைச் சொல்லாயிற்று.

வண்ணம், வடிவு. அளவு, சுவை என்பனவற்றையும் இவை போல்வனவாகிய பிறவுமாகிய குணத்தை உணர்த்தும் சொல்லும் அதனை ஏற்கும் சொல்லும் இத்தன்மையினை உடையது இப்பொருள் என ஒன்றனை ஒன்று சிறப்பித்து வரும்.

**“வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று**
**அன்ன பிறவும் அதன்குணம் நுதலி**
**இன்னது இதுவென வரூஉம் இயற்கை**
**என்ன கிளவியும் பண்பின் தொகையே" 3**

இவ்வாறு அமையும் இரு சொற்களும் ஒரு பொருளின் மேல் வரும் இயல்பையுடைய எல்லாத் தொகைச்சொல்லும் பண்புத்தொகை என்று குறிப்பிடப்படுகிறது.

**(எ.கா)** வண்ணப்பண்பு - கருங்குதிரை (கரிதாகிய குதிரை)

**(எ.கா)** வடிவப்பண்பு - வட்டப்பலகை (வட்டமாகிய பலகை)

**(எ.கா)** அளவுப்பண்பு - நெடுங்கோல் (நெடிதாகிய கோல்)

**(எ.கா)** சுவைப் பண்பு - தீங்கரும்பு (தீவிதாகிய கரும்பு)

இங்குப் பண்புச் சொல்லும் பண்புடைப் பொருளைக் குறித்தமையால் இரு சொல்லும் ஒரு பொருளாய் நின்று ஒன்றையொன்று சிறப்பித்து நின்றன.

- சொற்களின் இடையிலும் ஈற்றிலும் எண்ணிடைச் சொல்லாகிய 'உம்' மறைந்து நிற்பது உம்மைத் தொகையாகும். இரு பெயர். பலபெயர், அளவுப் பெயர், உயர்திணை எண்ணியற் பெயர். நிறைப்பெயர், அஃறிணை எண்ணியற் பெயர் ஆகிய ஆறுவகைப் பெயர்ச் சொற்களைப் பொருந்தி அமைவது உம்மைத் தொகை என்பது தொல்காப்பியரின் கருத்தாகும்.

**(எ.கா)**

- உவாப் பதினான்கு - இருபெயராலாகிய உம்மைத்தொகை
- புலிவிற்கெண்டை - பலபெயராலாகிய உம்மைத்தொகை
- தூணிப்பதக்கு - அளவுப் பெயராலாகிய உம்மைத்தொகை

- முப்பத்துமூவர் - எண்ணியற்பெயராலாகிய உம்மைத்தொகை
- தொடியரை - நிறைப்பெயராலாகிய உம்மைத்தொகை
- பதினைந்து - எண்ணுப்பெயராலாகிய உம்மைத்தொகை

என இருபெயர் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகைச் சொற்திரளைத் தனக்குச் சார்பாகக் குறித்துநிற்கும் தன்மையுடைய உம்மைத்தொகையை,

**“இரு பெயர் பல்பெயர் அளவின் பெயரே**
**எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி**
**எண்ணின் பெயரோடு அவ்வறு கிளவியும்**
**கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே" 4**

என்பார் தொல்காப்பியர். மேலும் வேற்றுமைத்தொகை முதலாக அமைந்த தொகைகள் இருசொற்களால் அமைகின்ற போது உம்மைத் தொகையானது இருசொல்லாலும் இரண்டிற்கும் மேற்பட்ட பல சொற்களாலும் அமைகின்றது.

- தொகைச் சொற்களுள் இறுதியாகத் தொல்காப்பியர் அன்மொழித் தொகையினைக் குறிப்பிடுகிறார். பண்பு, உம்மை, வேற்றுமை ஆகிய மூன்று தொகைச் சொற்களை நிலைக்களனாகக் கொண்டு அவற்றின் ஈற்றில் அமைந்து தன் பொருளை உணர்த்தவது அன்மொழித் தொகை என்பதைப்

**“பண்புதொக வரூஉங் கிளவி யானும்**
**உம்மை தொக்க பெயர்வயி னானும்**
**வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்**
**ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே” 5**

என்பார்.

அதாவது அன்மொழித் தொகை பெரும்பாலும் பண்புத்தொகையை நிலைக்களனாய்க் கொண்டு பிறக்கும் என்பதும் சிறுபான்மை வேற்றுமை. உம்மைத் தொகைகளை நிலைக்களனாய்க் கொண்டு பிறக்கும் என்பதும் இதனால் பெறப்படுகிறது.

**(எ.கா)**

**வெள்ளாடை -** வெண்மையான ஆடையினள் (பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை)

**தகர ஞாழல் -** தகரமும் ஞாழலுமாகிய சாந்தினள் (உம்மைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை)

**பொற்றொடி -** பொன்னால் ஆகிய தொடியினள் (வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை)

மேலும் உவமைத் தொகை நிலைக்களத்தும் வினைத் தொகை நிலைக்களத்தும் அன்மொழித் தொகை பிறக்கும் என்பதும் தொல்காப்பியரின் கருத்தாகும்.

**பவளவாய் -** பவளம் போலும் வாயினள் (உவமைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை)

**திரிதாடி -** திரிந்த தாடியினன் (வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை)

இவ்வாறு பண்புச் சொற்கள் தொக்கி வரும் இடத்திலும், உம்மைத் தொக்கப் பெயர்க்கண்ணும், வேற்றுமைத் தொக்கப் பெயர்க்கண்ணும், சிறுபான்மை உவமை தொக்கப் பெயர்க்கண்ணும், வினைத் தொக்கப் பெயர்க்கண்ணும் இறுதிச் சொற்கள் நின்று நடக்கும் தன்மையை உடையன அன்மொழித் தொகைச் சொல் என்பது புலனாகின்றது.

அறுவகைப்பட்ட தொகைச்சொற்களும் அவற்றினது பொருள் நிலை மரபில் நான்கு இடங்களில் விளங்கித் தோன்றும் என்பதை,

**"முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்**
**இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்**
**அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்**
**அந்நான்கு என்ப பொருள்நிலை மரபே" 6**

என்கிறது இந்நூற்பா.

அதாவது,

**முன்மொழிமேல் பொருள் நிற்றல்**
↓
**(எ.கா)** வேங்கைப்பூ – பூ என்னும் முன்மொழி மேல் நின்றது

பின்மொழி மேல் பொருள் நிற்றல்
↓
**(எ.கா)** அடைகடல் – அடை என்னும் பின்மொழிமேல் நின்றது

இரு மொழி மேல் பொருள் நிற்றல்
↓
**(எ.கா)** இரவு பகல் – இருமொழி மேல் நின்றது.

புற மொழி மேல் நிற்றல்
↓
**(எ.கா)** வெள்ளாடை – உடுத்தான் என்னும் புறமொழி மேல் நின்றது.

இவ்வாறு தொகையும் அவற்றினது பொருள் நிலை மரபும் நான்கு வகைகளில் அமைகின்றன.

**குறிப்புகள்**

1. தொல்காப்பியம், சொல்: 413
2. தொல்காப்பியம், சொல்: 415
3. தொல்காப்பியம், சொல்: 416
4. தொல்காப்பியம், சொல்: 417
5. தொல்காப்பியம், சொல்: 418
6. தொல்காப்பியம், சொல்: 419

**Conceptualization of the caste in Seethayanam Novel**

Dr. Satheeswaran G

Assistant Professor of Tamil, School of Liberal Arts and Special Education

Kalasalingam Academy of Research and Education, (Deemed to be University), Krishnankoil – 626126 Virudungar District.

Email: tamilsathi1996@gmail.com

**Abstract:**

Human societies are sustained through shared cultural narratives, among which myths and literature play a crucial role in shaping and regulating collective life. These narratives often function to legitimize and reinforce the ideologies of the ruling classes, ensuring conformity and social order. Yet, within the same cultural framework, myths and literature also carry the potential to question authority and articulate dissent. The Ramayana, as a foundational myth, upholds caste hierarchies and consolidates social dominance through its symbolic structure. In contrast, Seethayanam reimagines and reclaims these very myths, exposing the historical realities and inner workings of caste oppression. Through its re-reading of myth, the novel cultivates a counter-discourse that challenges inherited hierarchies and affirms a resistant consciousness. This paper explores how Seethayanam conceptualizes caste and redefines myth as a site of ideological struggle and social critique.

**Keywords:** Myth, Reinterpretation, Caste, Seethayanam

**References**

- Arunan. (n.d.). *Social reform in Tamil Nadu: A two-century history*. Bharathi Puthakalayam.
- Elango, C. (n.d.). *Caste and Hindutva in Tamil Nadu*. Alaigal Pathippagam.
- Gouthaman, P. (Ed.). (n.d.). *Why should you get angry if I say it?* NCPH.
- Govindasamy, I. (n.d.). *Caste and class*. Alaigal Pathippagam.
- Jaiswal, S. (n.d.). *Brahminical hegemony*. (Saamy, Trans.). Sinthan Pathippagam.
- Mathaiyan, P. (n.d.). *Sangam period tribal society and state formation*. Pavai Pathippagam.
- Sengupta, M. (n.d.). *Seethayanam*. (G. Chatheswaran, Trans.). Anangu Veliyeedu.
- Teltumbde, A. (n.d.). *Anti-imperialism and annihilation of caste*. (S. V. Rajadurai, Trans.). NCPH.

*Kalanjiyam International Journal of Tamil Studies* *E-ISSN 2456-5148*
Volume 21 | Issue 01, May 2016 Since:2016

# சீதாயணம் புதினத்தில் சாதி என்னும் கருத்தாக்கம்

**முனைவர் ஞா.சத்தீஸ்வரன்**

**தமிழ் உதவிப் பேராசிரியர், தாராள கலைகள் மற்றும் சிறப்புக் கல்விப் புலம்,**

**கலாசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்),**

**கிருஷ்ணன்கோவில் – 626126 விருதுநகர் மாவட்டம்.**

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு சமூகத்தில் குழுவாகச் சேர்ந்து வாழும் மனிதர்களைப் பண்பாட்டு ரீதியிலான தொன்மங்களும் இலக்கியங்களும் ஒழுங்குப்படுத்திக் கட்டுப்படுத்துகின்றன. ஆளும் வர்க்கத்தின் கருத்தியல்களுக்குப் பெரும்பான்மை மக்களை இணங்கச் செய்யும் வேலையை இவை செய்கின்றன. அதே சமயத்தில் அதிகாரத்திற்கு எதிரான கருத்தியலையும் தொன்மங்களும் இலக்கியங்களும் கொண்டுள்ளன. இராமாயணத் தொன்மங்கள் சாதியக் கட்டமைப்பை உறுதிப்படுத்தி, ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாக அமைகிறது. அதே தொன்மங்களை மறுவாசிப்புச் செய்து படைக்கப்பட்ட சீதாயணம் புதினம் சாதியின் வரலாற்றையும் அதன் இயங்கியலையும் விளக்கி, அதற்கு எதிரான மனநிலையை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது. சீதாயணம் புதினத்தின் வழியாக அறியலாகும் சாதி பற்றிய கருத்தாக்கம் என்னவென்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**குறிச்சொற்கள்: தொன்மம், மறுவாசிப்பு, சாதி, சீதாயணம்**

**முன்னுரை**

சாதி என்பது மனிதர்களைப் பிறப்பின் அடிப்படையில் வேறுபடுத்துவதாக உள்ளது. மரபான தொன்மங்கள் அனைத்தும் இந்தச் சாதியமைப்புக்கு ஆதரவானதாக இருப்பதைக் காண முடிகிறது. ஆனால், அத்தொன்மங்களைச் சமகால சமூக, அரசியல் பின்புலத்துடன் மறுவாசிப்புக்கு உட்படுத்தும் புனைவுகளில் அவை கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. மல்லிகா சென்குப்தாவால் வங்காளத்தில் எழுதப்பட்ட சீதாயணம் புதினம் இராமாயணத் தொன்மங்களை மறுவாசிப்புக்குட்படுத்தி படைக்கப்பட்டுள்ளது. இப்புதினத்தின் வழியாக அறியலாகும் சாதி பற்றிய கருத்தாக்கத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

**சாதி – பொருள் விளக்கம்**

திராவிட மொழிகளில் ‘ஜாதி’ அல்லது ‘சாதி’ என்னும் சொல்லுக்கு வேர்ச்சொல் இல்லை. இந்தோ ஐரோப்பிய மொழியின் வேர்ச்சொல்லான ‘ஜா’ என்பதிலிருந்து ‘ஜாதி’ என்னும் சொல் தோன்றியுள்ளது. இவ்வேர்ச் சொல்லுக்குப் ‘பிறப்பு’ என்பது பொருள். பிறப்புக்கான மரபணுவைக் குறிக்கும் ‘gene’ என்னும் ஆங்கிலச் சொல்லும் இதிலிருந்து கிளைத்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

சாதி என்னும் சொல்லுக்குத் தமிழ் அகராதிகள் தரும் பொருளை ஆராயும்போது சாதி, குலம், இனம், வகுப்பு, வருணம் என்பவை பல கூறுகளில் ஒன்றுபட்ட ஒரு குழுவினைக் குறிக்கும் சொற்களாக அமைகின்றன. ஆனால், சாதியை மக்கள் தொகுதியைக் குறிக்கும் ஒரு சொல்லாக மட்டும் வகைப்படுத்த முடியாது. ஏனெனில், சாதி என்பது ஒரு சமூகத்தில் உள்ள மக்களைப் பிளவுபடுத்தும் கருத்தியல் அமைப்பாகும். அது மக்களை வகைப்படுத்துவதுடன் நில்லாமல் அவர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகளையும் கற்பிக்கிறது. எனவேதான், "சாதி என்பது இந்துக்கள் கலந்து உறவாடுவதற்குத் தடையாக உள்ள கற்சுவரோ, கம்பி வேலியோ அல்ல. சாதி என்பது ஒரு எண்ணம், ஒரு மனநிலை"[1] என்று அம்பேத்கார் குறிப்பிடுகிறார்.

**சாதியின் தோற்றமும் வளர்ச்சியும்**

மனிதச் சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டுமிராண்டி நிலை, அநாகரிக நிலை, நாகரிக நிலை என்று மூன்று கட்டங்களாக வரலாற்றியல் மானுடவியலாளர்கள் வகைப்படுத்துகின்றனர். காட்டுமிராண்டி நிலையின் இறுதியில் இனக்குழுச் சமூகத்தின் கண ஆட்சிமுறை தோற்றம் பெறுகிறது. இந்தச் சமூக அமைப்பையே கார்ல் மார்க்ஸ் ஆதிப்பொதுவுடைமைச் சமூகம் என்று குறிப்பிடுகிறார். இந்த இனக்குழுச் சமூக அமைப்பில் சாதி உள்ளிட்ட ஏற்றத்தாழ்வுகள் காணப்படவில்லை. அதற்குப் பிந்தைய காலத்தில்தான் சொத்துடைமை உருவாகி, குடும்பம், அரசு, தனிச்சொத்து ஆகியவை தோற்றம் பெற்ற பிறகு உபரி உற்பத்தி தோன்றுகிறது. இந்த உபரி உற்பத்தியின் காரணமாகச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் தோன்றுகின்றன.

தொழிற்பிரிவுகளின் அடிப்படையில் தோன்றிய ஏற்றத்தாழ்வுகள், பிற்காலத்தில் இறுகிய சாதி வடிவமாக மாற்றம் பெறுகின்றன. தூய்மை, தீட்டு கருத்தியல்கள் தோற்றம் பெறுகின்றன. சமூக விலக்குதல், படிநிலை அமைப்பு ஆகியன தோற்றம் பெறுகின்றன. பார்ப்பன நலன்களை முன்னிறுத்திய சத்திரிய அரசதிகாரம் தோற்றம் பெறுகிறது. "இனக்குழுச் சமுதாயம் அழிந்து நிலவுடைமைச் சமுதாயம் தோன்றிய நிலையில் ஒருபுறத்தில் வேளாண் பொருளாதாரமும் உபரி உற்பத்தியால் வணிகமும் பெருகிய சூழலில் உடைமைப் பாதுகாப்பிற்கான அரசும் அரசனும் அரசின் அரசனின் பாதுகாவலர்களாக அந்தணர்களும் மேலோங்குகின்றனர்."[2] என்கிறார், பெ.மாதையன். இந்தப் பார்ப்பனிய ஆண்மைய அரசதிகாரத்தை நிலைநிறுத்தவும் அதன் இருப்புக்கு நியாயம் கற்பிக்கவும் பல்வேறு புராணங்களும் தொன்மங்களும் தோற்றுவிக்கப்பெறுகின்றன.

**புராணத் தொன்மங்களில் சாதி**

இராமாயணம், மகாபாரதம் உள்ளிட்ட புராணங்களில் இடம்பெறும் தொன்மங்கள் பார்ப்பனர்களின் நலன்களைக் காக்கும் சாதிய அமைப்பை நியாயப்படுத்துபவையாகவும் அவற்றை வலுப்படுத்துபவையாகவும் உள்ளன. பார்ப்பனர்களின் நலன்களைக் காப்பதே ஒரு சத்திரிய

மன்னனின் தலையாய கடமை என்று அவை போதிக்கின்றன. அதனால்தான் தவம் செய்த குற்றத்திற்காகச் சம்பூகன் என்னும் சூத்திரனை இராமன் கொலை செய்கிறான். காதலை முன்மொழிந்த குற்றத்திற்காக சூர்ப்பணகையின் மூக்கறுக்கப்படுகிறது. தங்கள் நிலத்தின் மீதான உரிமையை விட்டுத்தர மறுத்த பழங்குடியினரை, பார்ப்பனர்களுக்காகச் சத்திரிய மன்னர்கள் ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கின்றனர். பட்டத்து அரசியைத் தீக்குளிக்கச் செய்தும், நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாலும் காட்டுக்கு அனுப்பியும் சாதியின் தூய்மையும் வருணாசிரமத்தின் புனிதமும் காப்பாற்றப்படுகின்றன.

இவ்வாறு சாதி அமைப்பையும் அதன்வழியாகப் பார்ப்பன மேலாதிக்கத்தையும் வளர்த்தெடுத்ததில் தொன்மங்களின் பங்கு மிக முக்கியமானது என்பதை ஆய்வாளர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர். "பார்ப்பன மேலாதிக்கத்தை வார்த்தெடுத்ததில் மதமும் புராணமும் வகித்த பங்கு மிக முக்கியமானது. ஆதிக்கக்காரர்களுக்கும் அடக்கப்பட்டோருக்கும் இடையிலான உரையாடலுக்கு உதவிய கருவிகள் என்ற வகையில் அவை இந்த இரு சாராருக்கும் இடையில் சமூகப் பிணைப்புகளை ஏற்படுத்தின. இவற்றின் வழியாக அவை ஆதிக்கத்திற்கு எதிரான சக்திகளின் ஆற்றலை மட்டுப்படுத்தின."[3] என்கிறார், சுவிரா ஜெய்ஸ்வால். இதனால்தான் புராணங்கள் அனைத்தும் பார்ப்பனர்களால் கட்டமைக்கப்பட்ட பொய்கள் என்று பெரியார் மீண்டும் மீண்டும் பேசிவந்துள்ளார். "இராமன் கதை ஜாதியை, மதத்தைக் காப்பாற்றவே கோக்கப்பட்ட பித்தலாட்டப் புளுகுக் கதையாக இருக்கிறது."[4] என்று அவர் குறிப்பிடுவதன் பின்னணி இதுவே.

இந்தப் புரிதலுடன் புராணங்களை அணுகும்போது அவை புனையப்பட்டதன் நோக்கம் வெளிப்படும். இராமாயணத்தில் இராமன் இலட்சிய நாயகனாகக் காட்டப்படுகிறான். அவன் பார்ப்பன முனிவர்களின் கண்ணுக்குக் கண்ணாக விளங்கியவன். பார்ப்பனர்களின் நலன்களையே தனது நலனாக எண்ணிச் செயல்பட்டவன். பார்ப்பனக் குழந்தை பிழைப்பதற்காக, பார்ப்பனரல்லாத சம்பூகனை வதம் செய்தவன். அவன் முற்பிறவியில் செய்த பாவங்களைத் தீர்க்க தவம் செய்கிறான் என்று அதற்கு நியாயம் கற்பிக்கப்படுகிறது. பார்ப்பனர்களுக்காகப் பார்ப்பனரல்லாதவரைக் கொலை செய்வதும், சூழ்ச்சியால் அனாரிய அரசர்களைக் கொல்வதும் சத்திரிய தர்மமாக வால்மீகி இராமாயணத்தில் நியாயம் கற்பிக்கப்படுகிறது.

இவ்வாறு சாதிக் கொடுமைகளுக்குக் கோட்பாட்டு நியாயத்தை வழங்கும் தொன்மங்கள், புராணங்களுக்கு எதிரான மாற்றுக்குரல்களும் காலந்தோறும் சமூகத்தில் இருந்துவந்துள்ளன என்பதை, "தனது சாத்திரங்கள், பிரமாணங்கள், புராணங்கள் ஆகியவற்றின் மூலமாகச் சனாதன இந்து மதம், வரலாறு முழுமையும் பல்வேறு நிலைகளில் சாதிக் கொடுமைகட்கு ஒரு கோட்பாட்டு நியாயத்தை வழங்கி வந்துள்ளது. இன்னொருபக்கம் வரலாறு முழுமையும் இக்கொடுமைக்கு எதிரான

குரலும், பல்வேறு நிலைகளில் முழங்கி வந்திருக்கின்றன”[5] என்று விளக்குகிறார் இல.கோவிந்தசாமி. இந்த எதிர்க்குரல்களின் ஒரு வடிவமாகவே தொன்மங்களை மறுவாசிப்புச் செய்து படைக்கப்படும் புனைகதைகள் அமைகின்றன.

**தொன்ம மறுவாசிப்புப் புனைகதைகளில் சாதி**

தொன்மங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தி எழுதப்பட்ட புனைகதைகள் புராணத் தொன்மங்களைக் கட்டுடைத்துக் காட்டுகின்றன. சாதியின் தோற்றம் பற்றியும் அது எவ்வாறு நிலைநிறுத்தப்பட்டது என்பதைப் பற்றியும், அதன் இயங்கியலையும், பெரும்பான்மை உழைக்கும் மக்களும் பெண்களும் சாதியமைப்பினால் எவ்வாறு வஞ்சிக்கப்படுகின்றனர் என்பதையும் இப்புதினங்கள் தெளிவுபடுத்துகின்றன.

சாதியைப் பற்றிய பல்வேறு ஆய்வுகளைக் காட்டிலும் தொன்ம மறுவாசிப்புப் புனைகதைகளின் வழியாக அதனை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். சாதியின் தோற்றம், அதன் இயங்கியல், நால்வருண அமைப்பு, சாதிக்கும் பார்ப்பனியம், அரசதிகாரம், உழைக்கும் மக்கள், பெண்கள் ஆகியோருக்கும் இடையிலான உறவு ஆகியவற்றைத் தொன்ம மறுவாசிப்புப் புதினமான சீதாயணம் கட்டுடைத்துக் காட்டுகிறது.

**சீதாயணம் புதினத்தில் சாதி என்னும் கருத்தாக்கம்**

சாதி என்னும் கருத்தாக்கம் அடிப்படையில் மனிதர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிப்பது. சமூகத்தின் பெரும்பான்மை மனிதர்களைப் பாகுபடுத்தி சிறுபான்மையினராக உள்ள ஒரு குழு ஆதிக்கம் பெறுவதை நோக்கமாகக் கொண்டது. இன்றளவும் இந்தியச் சமூக அமைப்பின் இயங்கியலைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்ததாகச் சாதி நிலைபெற்றுள்ளது. “சாதி அமைப்பு இந்தியாவின் அடிக்கட்டுமான மேல்கட்டுமானக் கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ள இந்தச் சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான அமைப்பும் ஆகும். சமுதாய உற்பத்தி இயக்கம், மறு உற்பத்தி இயக்கம் முழுவதையும் நியதிப்படுத்துவது, சாதி அமைப்புதான்’’[6] என்கிறார், எஸ்.வி.ராஜதுரை.

சீதாயணம் புதினம் இராமாயணத் தொன்மங்களை மறுவாசிப்புச் செய்து படைக்கப்பட்டுள்ளது. இராமாயணத் தொன்மங்கள் பார்ப்பனிய ஆண்மைய அதிகாரத்தை நிலைநாட்டும் நோக்கம் கொண்டிருப்பதை இது மறுவாசிப்புக்கு உட்படுத்துகிறது. பார்ப்பனியமும் அரசதிகாரமும் இணைந்து பெரும்பான்மை மக்களுக்கு எதிராகச் சாதி என்னும் கருத்தியலைக் கட்டமைத்து எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை விளக்கும் வகையில் இப்புதினம் அமைந்துள்ளது.

சாதி என்னும் கருத்தாக்கத்தை நிலைநிறுத்தியதில் வருணாசிரமக் கொள்கைக்குப் பெரும் பங்குண்டு. மனிதர்களை நால்வருணங்களாகப் பாகுபடுத்தி அவர்களுக்கிடையே

ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிப்பதன் வழியாகச் சாதியமைப்பை வலிமைப்படுத்தியுள்ளது இந்த வருணாசிரமம். இந்த நால்வருண அமைப்பு கடவுளாலேயே படைக்கப்பட்டதாக நம்பவைக்கப்பட்டுள்ளது.

இந்த வருணாசிரம அமைப்பின் கொடுங்கோன்மையைச் சீதாயணம் வெளிப்படுத்துகிறது. இப்புதினத்தில் 'வைதீகத்தின் குருதியில் மலர்ந்தது வருணாசிரமம் என்னும் நச்சுமலர்" என்ற தனி அத்தியாயமே இடம்பெற்றுள்ளது.

சீதாயணம் புதினத்தில், "பிராமணன் அதன் முகமாக இருந்தான், அதன் தோள்களிலிருந்து வந்தவன் அரசன், அதன் தொடையிலிருந்து தோன்றியவன் வைசியன், அதன் பாதங்களிலிருந்து சூத்திரன் பிறந்தான்..."[7] என்று வால்மீகி நால்வருணம் தோன்றிய வரலாற்றினைத் தனது சீடர்களுக்குக் கற்பிக்கிறார். வருணாசிரமத்தின் வழியாகச் சாதிய அமைப்பு முழுமையாக நிலைநிறுத்தப்பட்டதும், ஒட்டுமொத்த அதிகாரமும் சிறுபான்மையினரான பார்ப்பனர்களின் கைகளுக்குள் வந்தது. பெரும்பான்மையான மக்கள் இவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டிய சூழல் உருவாகிவிட்டது என்பதைக் கதையின் போக்கினூடாகவே வாசகர்கள் புரிந்துகொள்ள முடிகிறது.

**சாதியும் பார்ப்பனியமும்**

சாதியமைப்பை உருவாக்கியவர்கள் பார்ப்பனர்களா, இல்லையா என்பதில் ஆய்வாளர்களிடையே இருவேறு கருத்துகள் உள்ளன. ஆனால், இந்தச் சாதியமைப்பை இறுகிய வடிவமாக மாற்றியமைத்ததும் அதனால் பெரும்பலன்களை அனுபவித்து வருவதும் பார்ப்பனர்களே. அவர்களது நலன்களை முன்னிறுத்தியே இந்த வருணாசிரமச் சாதியமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. "வேதங்களைக் கொண்டு பிராமணர்கள் தங்களை உயர்வானவர்களாகக் காட்டிக்கொண்டனர். காலப்போக்கில் அரசதிகார மாற்றம் பார்ப்பன நூல்கள் வழியிலான ஆட்சிமுறை என்ற சூழல்நிலைகள் உருவாயின. மனுதர்ம சாஸ்திரம் பிராமணர்களைத் தவிர மற்றவர்களை அவர்களுக்குக் கீழானவர்களாகப் பிரித்தது"[8] என்கிறார், சி.இளங்கோ.

தங்களது நலன்களைக் காக்க அரசர்களைப் பயன்படுத்தி பார்ப்பனர்கள் உருவாக்கிய அரசதிகாரத்தை நிலைநிறுத்தும் வகையில் பல்வேறு புராணங்களையும் தொன்மங்களையும் கட்டமைத்தனர். இராமாயணமும் அவற்றில் ஒன்று. எனவேதான், சீதாயணம் புதினத்தில் பார்ப்பனர்கள் மேன்மையானவர்கள் என்னும்போது அவர்கள் மற்றவர்களின் உழைப்பில் வாழலாமா? என்று வால்மீகி கேள்வி எழுப்பும்போது, "ஓ! இந்த கட்டுக்கதைகள் அனைத்தையும் நீங்களும் நம்ப ஆரம்பித்துவிட்டீர்களா வால்மீகி! அது மற்றவர்களின் கண்களைப் பொத்தி வைப்பதற்காகப் பரப்பப்பட்ட சூழ்ச்சி, அவை பிராமணர்களால் எழுதப்பட்டவை, பிராமணர்களின்

வழியாகவே பரப்பப்பட்டவை"[9] என்று அகத்தியர் பதிலளிக்கிறார். பார்ப்பன மேன்மை பற்றிய கதைகள் அனைத்தும் அவர்களாலேயே உருவாக்கப்பட்டவை என்பதை இப்பகுதி தெளிவுபடுத்துகிறது.

மேலும், சமூகத்தில் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒழுங்குகளாக வைதீக சமயத்தால் கட்டமைக்கப்பட்டுள்ள விதிகளும் பார்ப்பனர்களின் நலன்களைப் பொறுத்து மாற்றத்திற்கு உட்பட்டவை என்பதையும் சீதாயணம் விளக்குகிறது. "அரசர்களதும் மற்றவர்களதும் மூளைகளில் நிறைந்திருக்கும் கட்டுக்கதைகள் பிராமணர்களின் மேன்மையை ஒவ்வொரு கணமும் நிரூபித்துக்கொண்டுதான் இருக்கின்றன. பிராமணன் மூளையில் அதற்கு எந்த மதிப்பும் இல்லை. அதுமட்டுமின்றி உண்மையான சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிராமணன் அந்தக் கட்டுக்கதைகளை மாற்றியமைக்கிறான். மற்றவர்கள் இயந்திரங்கள், பிராமணன் இயந்திரங்களை இயக்குபவன்"[10] என்று அகத்தியர் வழியாகவே மல்லிகா சென்குப்தா வெளிப்படுத்துகிறார்.

பார்ப்பனர்களின் இந்தச் சூழ்ச்சியை மற்றவர்களும் அறிந்துவைத்திருந்தனர். "வருணாசிரமம், இதுகூட ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட தந்திரமே அன்றி வேறென்ன! பிராமணர்கள் மற்ற எல்லாரையும் விட உயர்ந்தவர்களா! ஆனால், அவர்கள் உயர்ந்தவர்களாகப் பரப்புரை செய்கின்றனர். மிகுந்த தந்திரத்தின் மூலம் பிறர் பாடுபட்டு விளைவித்த தானியங்கள், உடைகள், உலோகப் பொருட்கள் அனைத்தையும் அனுபவிக்கின்றனர். இந்தப் பிராமணர்களைப் பாதுகாப்பதற்கென்றே அரசர்கள் இருக்கின்றனர்"[11] என்று துந்துவி என்னும் பழங்குடி இளைஞன் கூறுவதாக மல்லிகா படைத்துள்ளார்.

இந்த ஒடுக்குமுறைக்கும் ஆதிக்கத்திற்கும் பார்ப்பனியம் சில கருத்தியல் அடிப்படைகளை உருவாக்கிக் கொண்டது. பிறப்பு அடிப்படையிலான பாகுபாடு, தொழிலில் சிறப்புத் திறன், புனிதம்-தீட்டு, தீண்டாமை, சமூக விலக்கம், சடங்குமுறைகள் ஆகியவை அவற்றில் முக்கியமானவை என்பதையும் இப்புதினம் எடுத்துரைக்கிறது.

**முடிவுரை**

சாதி என்பது இயற்கையான ஒன்றல்ல. அது செயற்கையாகக் கட்டமைக்கப்பட்டது. சாதியமைப்பு பார்ப்பனர்கள் மற்றும் அரசர்களாகிய சத்திரியர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. சாதியமைப்பை வளர்த்தெடுக்கவும் அதற்கு நியாயம் கற்பிக்கவும் புராணத் தொன்மங்கள் பெரும்பங்களிப்பினைச் செய்துள்ளன. பார்ப்பனிய அரசதிகாரம் தனது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் ஒரு கூட்டணியை அமைத்துக்கொண்டு, பெரும்பான்மையினராக உள்ள உழைக்கும் மக்களை ஒடுக்குகிறது என்பதைச் சீதாயணம் புதினம் வெளிப்படுத்துகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தமிழகத்தில் சமூகச் சீர்திருத்தம் இருநூற்றாண்டு வரலாறு, ப.254
2. சங்க கால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், ப.128
3. பார்ப்பன மேலாதிக்கம், ப.17
4. நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?, ப.575
5. சாதியும் வர்க்கமும், ப.9
6. ஏகாதிபத்திய எதிர்ப்பும் சாதி ஒழிப்பும், ப.28
7. சீதாயணம், ப.110
8. தமிழகத்தில் சாதியும் இந்துத்துவமும், ப.15
9. சீதாயணம், ப.122
10. மேலது, ப.122
11. மேலது, ப.118

**துணைநூற்பட்டியல்**


**1.** மல்லிகா சென்குப்தா, சத்தீஸ்வரன், ஞா.(மொ.ர்), சீதாயணம், அணங்கு வெளியீடு, பாண்டிச்சேரி.

**2.** அருணன், தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் இருநூற்றாண்டு வரலாறு, பாரதி புத்தகாலயம், சென்னை.

12. மாதையன், பெ., சங்க கால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பதிப்பகம், சென்னை.

13. சுவீரா ஜெய்ஸ்வால், சாமி (மொ-ர்), பார்ப்பன மேலாதிக்கம், சிந்தன் பதிப்பகம், சென்னை.

14. கௌதமன், பசு. (தொ.ஆ), நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும், என்சிபிஎச், சென்னை.

15. கோவிந்தசாமி, இல., சாதியும் வர்க்கமும், அலைகள் பதிப்பகம், சென்னை.

16. ஆனந்த் தெல்தும்டே, எஸ்.வி.ராஜதுரை(மொ.ர்), ஏகாதிபத்திய எதிர்ப்பும் சாதி ஒழிப்பும், என்சிபிஎச், சென்னை.

17. இளங்கோ, சி., தமிழகத்தில் சாதியும் இந்துத்துவமும், அலைகள் பதிப்பகம், சென்னை.


Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).